
அறிவார்ந்து இருங்கள்

# தகவல்களைப் பொறுப்புணர்வுடன் பகிர்தல்




## பொறுப்புணர்வுடன் பகிர்தல் என்றால் என்ன அர்த்தம்?

நீங்கள் எந்தவொரு உள்ளடக்கத்தைப் பகிர்வதற்கு முன், அந்த உள்ளடக்கத்திற்குத் தகுந்த ஆதாரங்களும் நம்பகத்தன்மையும் உள்ளனவா என்று மதிப்பீடு செய்யுங்கள்.

## பொறுப்பற்ற முறையில் பகிர்வதால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் யாவை?

தகவல்களைப் பொறுப்பற்ற முறையில் பகிர்வது, எண்ணற்ற எதிர்மறையான பின்விளைவுகளை ஏற்படுத்தலாம்:




### ஏமாற்றுதல்கள் மற்றும் மோசடிகள்:

- நாம் சரிபார்க்கப்படாத தகவல்களைப் பகிரும்போது, அது மற்றவர்கள் ஏமாற்று வார்த்தைகளை நம்புவதற்கும் மோசடிகளில் சிக்கிக் கொள்வதற்கும் தவறாக வழிநடத்தும்.
- மார்ச் 2020-இல், "பிரதமர் லீ சியன் லூங்" அனுப்பியதாக இணையத்தில் பரவிய போலி மின்னஞ்சல், வாசகர்களை "பங்களிப்புகள் மற்றும் எண்ணங்களுடன்" பதிலளிக்க ஊக்குவித்தது.
- அந்த ஏமாற்று மின்னஞ்சலுக்குப் பதிலளிப்பதன் மூலம், அப்பாவி பதிலளிப்பவர்கள் நிதிசார்ந்த மோசடிகளில் (ஃபிஷிங் ஸ்கேம்) சிக்கிக் கொள்வார்கள். அதன் மூலம், கணினி ஊடுருவிகள் (ஹேக்கர்கள்) மற்றும் குற்றவாளிகள் அவர்களின் தனிப்பட்ட தகவல்களைத் திருடிவிடுவார்கள்.




### தேவையற்ற அச்சத்தைப் பரப்புதல்:

- பொய்யான தகவல்களைப் பகிர்வது, தேவையற்ற அச்சத்தையும் பரப்பலாம்.
- ஏப்ரல் 2020-இல், உணவு வளாகங்கள் மற்றும் காபி கடைகள் மூடப்பட உள்ளதாகவும், பேரங்காடிகள் மட்டும் வாரத்தில் இரண்டு நாட்கள் திறந்திருக்கும் என்ற செய்தி ஒரு ஃபேஸ்புக் குழுவில் பதிவிடப்பட்டது.
- இந்தப் பதிவானது, அக்குழுவில் உள்ள உறுப்பினர்களை ஒரு மாதத்திற்குத் தேவையான பொருட்களை மொத்தமாக வாங்குவதற்கு ஊக்குவித்தது.
- இந்த ஆதாரமற்ற தகவல், பொதுமக்களிடையே பீதியை ஏற்படுத்தி, உடனடியாகப் பொருட்களை வாங்கத் தூண்டும் திறனைக் கொண்டிருந்தது.

#அறிவார்ந்து இருங்கள்

நீங்கள் பகிர்ந்துகொள்ளும் தகவல்கள் குறித்து விழிப்புடன் இருங்கள்


1 Click Away — Be Safe · Be Smart · Be Kind
MEDIA LITERACY COUNCIL
ஆதரவளித்தவர்: INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY; SINDA Singapore Indian Development Association
இவரது ஆதரவுடன்: SG:D | GET READY!





**எதிர்மறையான இணையச் சூழல்:**

- நாம் மற்றவர்களைப் பற்றி எதிர்மறையான உள்ளடக்கத்தையும் கருத்துகளையும் இணையத்தில் பகிரும்போது, அது அவர்களின் உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகளில் உண்மையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- உலகளாவிய கொவிட்-19 கிருமித்தொற்று பரவலானது, இணையவழி சட்டத்தைக் கையில் எடுத்துச் செயல்படுபவர்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது. அவர்கள் பாதுகாப்பான இடைவெளியைக் கடைப்பிடித்தல் விதிகளை மீறுபவர்களைப் பற்றி புகாரளிக்கப்படும் போது கடுமையான நடவடிக்கைகளை எடுக்கிறார்கள்.
- அவர்களில் சிலர், விதிகளுக்கு இணங்கவில்லை என்று தாங்கள் நம்பும் நபர்களுடன் நேரடியாக முரண்பட்டு, அவர்களைக் காணொளியில் பதிவு செய்கிறார்கள். மேலும், தீவிர நிகழ்வுகளில், அவர்களை அவமானப்படுத்தி, வாய்மொழியாகத் துன்புறுத்துகிறார்கள்.

## நான் பொறுப்புணர்வுடன் பகிர்வதற்கு எவ்வாறு பயிற்சி செய்யலாம்?

நீங்கள் எதையும் பகிர்வதற்கு முன் இருமுறை சிந்திக்கவும், மேலும் கீழ்க்கண்டவற்றை உங்களுக்கு நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்:






### இது உண்மையா?

- அந்த உள்ளடக்கம் உண்மையானதா என்பதைச் சரிபார்க்க, பிற நம்பகமான ஆதாரங்கள் மற்றும் செய்தி ஊடகங்களில் சரிபார்க்கவும்.
- Factually (சிங்கப்பூர் தொடர்பான உள்ளடக்கத்திற்கு), FactCheck அல்லது சர்வதேச உள்ளடக்கத்திற்கு Snopes போன்ற வலைத்தளங்கள் மூலம் உண்மை நிலையைக் கண்டறியவும்.
- ஒரு சரிபார்க்கப்படாத உள்ளடக்கம் அல்லது செய்தி ஒரு மோசடியா என்பதைச் சரிபார்க்க, scamalert.sg என்ற வலைத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது 1800-772-6688 என்ற நேரடித் தொலைபேசி எண்ணில் மோசடி-எதிர்ப்பு (Anti-Scam) -ஐ அழைக்கவும்.

### இது உதவியாக இருக்கிறதா?

- நீங்கள் பகிர்வதற்கு முன்பு, முழுக் கதையையும் படித்துப் பார்த்து, அக்கட்டுரை பயனுள்ள தகவல் ஆதாரமாக இருக்கிறதா என்று மதிப்பீடு செய்யுங்கள்.
- நீங்கள் அந்த உள்ளடக்கத்தைப் பகிர்வதற்கு முன்பு, அதன் படைப்பாளருக்கு என்ன உள்நோக்கங்கள் இருந்திருக்கலாம் என்று சிந்தியுங்கள். சுய விருப்பு வெறுப்புகளைக் கொண்டிருக்கும் தனிநபர்கள், உள்ளடக்கத்தை உருவாக்கும் போது தங்கள் சொந்தக் கருத்துக்களை உண்மையானவை போன்று அவற்றில் சேர்த்து அனுப்பலாம்.
- ஏமாற்றுகள் மற்றும் மோசடிகளானது, உண்மையானவை போன்று தோன்றக்கூடிய சலுகைகளைக் கொண்டும் மக்களைக் கவர்ந்திழுக்கலாம். உங்கள் நண்பர்களுடன் நீங்கள் ஒரு சிறந்த சலுகையைப் பற்றி பகிர்ந்து கொள்கிறீர்கள் என்று நீங்கள் நினைக்கும்போது, முதலில் அதைச் சரிபார்ப்பது எப்பொழுதும் சிறந்ததாகும்.




## #அறிவார்ந்து இருங்கள்

**நீங்கள் பகிர்ந்துகொள்ளும் தகவல்கள் குறித்து விழிப்புடன் இருங்கள்**

1 CLICK AWAY — Be Safe · Be Smart · Be Kind

MEDIA LITERACY COUNCIL

ஆதரவளித்தவர்: INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY, SINDA Singapore Indian Development Association

இவரது ஆதரவுடன்: SG:D | GET READY!




## இது ஊக்கமளிப்பதாக இருக்கிறதா?

- அந்த உள்ளடக்கம் மற்றவர்களை நேர்மறையான வழியில் செயல்பட ஊக்குவிக்க உதவுகிறதா என்பதையும், நீங்கள் நம்புகின்ற ஓர் அர்த்தமுள்ள காரணத்தை அது ஆதரிக்கிறதா என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.
- அந்த உள்ளடக்கத்தின் படைப்பாளர்களுடனோ அல்லது நீங்கள் பகிரும் கருத்துடனோ உங்கள் பெயர் இணைந்திருப்பதில் நீங்கள் பெருமைப்படுவீர்களா என்று சிந்தியுங்கள்.
- நேர்மறையான இணைய உலகிற்குப் பங்களித்தல் என்பது, மற்றவர்களை ஊக்குவிக்கும் மற்றும் உற்சாகப்படுத்தும் உள்ளடக்கத்தை நாம் பகிர்கிறோம் என்பதாகும்.

## இது அவசியமா?

- எந்தவொரு தகவலையும் பகிர்வதற்கு முன், நீங்கள் பகிர்வது சமூகத்திற்கு நன்மை அளிக்கிறதா என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.
- மேலும், நீங்கள் பகிர்ந்து கொள்ள விரும்பும் கருத்துகள் யாரிடமாவது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துமா என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.
- உங்களின் தொலைபேசி எண், முகவரி மற்றும் பிறந்த தேதி போன்ற உங்களின் தனிப்பட்ட தகவல்களை அதிகளவில் பகிர்ந்துகொள்வதைத் தவிர்க்கவும்.
- உங்கள் தனிப்பட்ட உரைகள், காணொளிகள் மற்றும் செய்திகள் தனிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று நீங்கள் தெரிவித்தாலும் கூட அவை பகிரப்படலாம் அல்லது கசியவிடப்படலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.







## இது கனிவுடன் இருக்கிறதா?

- நீங்கள் ஒரு கருத்தை அல்லது உள்ளடக்கத்தைப் பகிரும்போது, அதிலுள்ள சொற்கள், தொனி மற்றும் அணுகுமுறை கனிவுடன் இருக்கிறதா என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.
- வேறொருவர் வருமானம் இழக்கும் வகையில் நீங்கள் ஏதாவது பொழுதுபோக்கான உள்ளடக்கத்தைப் பகிர்கிறீர்கள் என்றால், உங்களை அறியாமலேயே நீங்கள் தீங்கு விளைவிக்கலாம்.
- இணையத்தில் பதிவேற்றப்பட்ட ஓர் இணையவழிக் கருத்து, ஸ்கிரீன்ஷாட்களின் பகிர்வு காரணமாக இணையத்தில் தொடர்ந்து பரப்பப்படலாம் என்பதால், அது நீண்ட காலத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம்.
- ஒரு பொதுவான விதியாக, நீங்கள் ஒருவரிடம் நேரில் சொல்லாத எதையும் இணையத்தில் சொல்ல வேண்டாம்.

#அறிவார்ந்து இருங்கள்

நீங்கள் பகிர்ந்துகொள்ளும் தகவல்கள் குறித்து விழிப்புடன் இருங்கள்

1 CLICK AWAY Be Safe · Be Smart · Be Kind

MEDIA LITERACY COUNCIL

ஆதரவளித்தவர்:

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

SINDA Singapore Indian Development Association

இவரது ஆதரவுடன்:

SG:D | GET READY!